விதைப் பண்ணைகளில் வழங்கப்படும் வீரிய விதைகள்.

635—(* வினா எண் 8876)—திரு. த. பழனி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விதை பண்ணைகள் உருவாக்கித் தரும் வீரிய விதைகளின் தரம் குறைந்துள்ளது என விவசாயிகள் கருதுவது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : விதைப் பண்ணைகளில் பயிரிடப்படும் பயிர்கள் சான்றளிப்புத்துறை அலுவலர்களால் கண்காணிக்கப்பட்டு, விதைகள் அவர்கள் மேற்பார்வையிலேயே சுத்திகரிக்கப்பட்டு, விதை பரிசோதனை நிலையங்களில் பரிசோதனை செய்யப்பட்டு சான்றிதழ் வழங்கிய பின்னரே, கொள்முதல் செய்து வினியோகிக்கப்படுவதால், விதைகளின் தரம் குறையவோ, வீரியம் குறையவோ வாய்ப்பு ஏதுமில்லை. மற்றும் இவ்விதைகள் தரம் குறைந்துள்ளது என விவசாயிகளிடமிருந்து புகார்கள் வரவில்லை.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதைப் பண்ணையிலே 1985–86-ல் என்ன விதைகள் எவ்வளவு விதைகள் தமிழகத்தில் விநியோகம் செய்யப்பட்டன என்பதையும், 1986-87 ஆம் ஆண்டுக்கு என்னென்ன விதைகள், எவ்வெவ்வளவு விதைகள் வழங்கப்பட உள்ளன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, உள்ள விதைகள் எவ்வளவு என்கின்ற தகவல் என்னிடம் இல்லை. ஆனால் கடந்த ஆண்டு சான்று பெற்ற விதைகளில் இதுவரையில் விநியோகம் செய்யப்பட்டது, நெல் 14,820 மெட்ரிக் டன், கேழ்வரகு 297 மெட்ரிக் டன், சோளம் 463 மெட்ரிக் டன், வீரிய சோளம் 18 மெட்ரிக் டன், கம்பு 451 மெட்ரிக் டன், மக்காச் சோளம் 103 மெட்ரிக் டன்.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே எண்ணெய் வித்துக்கள் அடங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : அடங்காது.

திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளிடமிருந்து வாங்கும் சாதாரண நெல்லை, விதை என்று வாங்கி, அதையே நாம் டெப்போக்களில் வைத்து மீண்டும் விவசாயிகளுக்கு வழங்கும்போது தரமான விதையாக இலை என்று விவசாயிகள் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதை வாங்குகிற அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதோடு, இப்படி விவசாயிகளிடமிருந்து தனியாக நெல், விதை என்று எத்தனை டன் கொள்முதல் செய்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, எவ்வளவு என்ற குறிப்பு இல்லை. ஆனால் சான்று அளிக்கப்பட்ட விதைகளைத்தான் வாங்கவேண்டும், கொள்முதல் செய்ய வேண்டுமென்று தெளிவாக அறிவுறுத்தியிருக்கிறோம். அதை மீறி தவறு நடந்த சூழ்நிலை இருக்குமானால், அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடத்திலே இப்படிப்பட்ட தவறுகள் நடந்திருக்கின்றன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதன்மீது நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விதைகள் தயாராகின்ற நிலையில் பதர்களும் சேர்ந்து இருப்பதன் காரணமாக, சரியான முறையில் காய வைக்காத நிலையில் அதை விதைக்கும்போது முளை வருவதில்லை என்று பொது மக்கள் கூறுகிறார்கள். நல்ல முறையில் பதர்களை நீக்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சான்று அளிக்கப்பட்ட விதைகளை வாங்கி விதைகள் சுத்திகரிக்கப்பட்ட பின்னர் விவசாயப் பெருமக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று நாங்கள் தெளிவுபடுத்தியிருக்கிறோம். பதர்களை நீக்குவது அரசினுடைய குறிக்கோள்.

திரு. த. பழனி : தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் கோவியனூர் ஒன்றியத்திலும், கரணை ஒன்றியத்திலும் போதுமான அளவிற்கு விதைகள் கிடைக்கவில்லை என்ற புகார் இருக்கிறது. அதுவும் குறிப்பாக மணிலா போன்று மானிய விலையில் கொடுக்கப்படுவது சரியான முறையில் கிடைப்பது இல்லை. எனவே போதுமான அளவில் அது கிடைப்பதற்கு ஆவன செய்யப்படுமா ? அதற்கு மேலும் ஒதுக்கீடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஆவன செய்யப்படும்.

திறந்தவெளிச் சிறைச்சாலைகள்

*688—(*வினா எண். 4088)* திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி சிங்கப்பட்டி பகுதியில் திறந்தவெளிச் சிறைச்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது திட்டம் நிறைவேற்றப்படும்?